# பாடநெறி வழிகாட்டி 2025




# கொழும்பு இறையியல் கல்லூரி

தேசங்களின் மறுரூபமாகுதலுக்காக திருச்சபைக்கான வளங்கள்

# கொழும்பு இறையியல் கல்லூரி
*தேசங்களின் மறுரூபமாகுதலுக்காக திருச்சபைக்கான வளங்கள்*

# பாடநெறி வழிகாட்டி
# 2025

இலங்கையிலும், அதற்கு அப்பாலும் திருச்சபை மற்றும் சந்தைவெளி எனப்படுகிற மதசார்பற்ற தொழில் ஸ்தாபனங்களிலும் விசுவாசிகளை திருச்சபைகளில் கிறிஸ்துவிற்கொப்பான தலைவர்களாக தயார்படுத்துவதற்காக இறையியல் கல்வியை வழங்குவதற்கு கொழும்பு இறையியல் கல்லூரியானது தன்னை அர்ப்பணித்துள்ளது.

கொழும்பு இறையியல் கல்லூரி என்பது, பல்தரப்பட்ட கிறிஸ்தவ பிரிவுகளை சேர்ந்த விசுவாசிகளின் மத்தியில் தொடர்புகளை ஏற்படுத்தவும், அவர்களது செழுமையான கிறிஸ்தவ மரபுகளை உணர்ந்து அறிந்துகொள்ளும் வாய்ப்பினையும் ஏற்படுத்தி தருகிற இறையியல் கல்லூரியாகும்.

கிறிஸ்தவ ஒற்றுமைக்கான கொழும்பு இறையியல் கல்லூரியின் அர்ப்பணிப்பானது பரிசுத்த வேதாகம அதிகாரத்தில் உறுதியாக வேரூன்றியுள்ளது: அது வேதாகமமே எமது விசுவாசத்திற்கும், வாழ்க்கைக்குமான இறுதியான வழிகாட்டி என்பதாகும்.

கொழும்பு இறையியல் கல்லூரியின் துடிப்பான கற்போர் சமூகத்துடன் இணைந்து கொண்டு விறுவிறுப்பான கற்றலின் பயணத்திலும் ஆவிக்குரிய வளர்ச்சியிலும் சுவிசேஷப்பணிக்கான பயன் தரக்கூடிய திறன்களை வளர்த்துக்கொள்வதிலும் பங்கெடுத்துக்கொள்ளுங்கள்.

**கொழும்பு இறையியல் கல்லூரியானது:**
**இலங்கை நாடாளுமன்றத்தின் 1971 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தில்**
**இணைக்கப்பட்ட கொழும்பு வேதாகம கல்லூரியினது ஒரே பிரிவும்**
**இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷ கூட்டணி (NCEASL) மற்றும்**
**இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம் (NCCSL) ஆகியவைகளில் உறுப்புரிமையும்,**
**ஆசிய இறையியல் சங்கத்தின் (ATA) கல்விக்கான அங்கீகாரமும் கொண்டது.**

# தொடர்பு கொள்வதற்கான தகவல்

| | |
|---|---|
| **பதிவாளர்** | registrar@cts.lk |
| **வடகொழும்பு கல்வி நிலையம்** | nc@cts.lk |
| **ஒருங்கிணைப்பாளர்: கல்வித்திட்டங்கள்** | student.services@cts.lk |
| **மாணவர் கணக்கியல்** | student.accounts@cts.lk |
| **மாணவர் புலமைப்பரிசில்கள்** | scholarships@cts.lk |
| **நூலகம்** | library@cts.lk |
| **தகவல் தொழில்நுட்பம்** | it@cts.lk |
| **பிரயோக ஊழியப்பயிற்சி** | practicums@cts.lk |
| **ஆற்றுப்பணி பாடத்திட்டம்** | counselling@cts.lk |
| **முதுமாணிப்பட்ட பாடத்திட்டம்** | ma@cts.lk |
| **சிறுவர் ஊழிய களம்** | cm@cts.lk |
| **உதவி கல்விப்பீடாதிபதி**<br>திரு. ஜூலியன் தேவதாசன் | julian@cts.lk |
| **கல்விப்பீடாதிபதி**<br>போதகர். ரவின் கல்தேரா | ravin@cts.lk |

**+94 11 2890809 | www.cts.lk**

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| **பொதுவான தகவல்கள்** | **4** |
| **தவணை 1: ஜனவரி - ஏப்ரல்** | |
| நேர அட்டவணை - கொஹுவலை | **6** |
| நேர அட்டவணை - வடகொழும்பு | **7** |
| வாரநாள் வகுப்புக்கள் | **8–10** |
| மாலைநேர வகுப்புக்கள் | **10** |
| இளமாணிப்பட்டத்திற்கான கருத்தரங்கு பாடம் | **11** |
| CTS வடகொழும்பு கல்வி நிலைய வகுப்புகள் | **11–12** |
| **தவணை 2: ஏப்ரல் - ஓகஸ்ட்** | |
| நேர அட்டவணை - கொஹுவலை | **14** |
| நேர அட்டவணை - வடகொழும்பு | **15** |
| வாரநாள் வகுப்புக்கள் | **16–18** |
| CTS வடகொழும்பு கல்வி நிலைய வகுப்புகள் | **19–20** |
| **தவணை 3: செப்டெம்பர் - நவம்பர்** | |
| நேர அட்டவணை - கொஹுவலை | **22** |
| நேர அட்டவணை - வடகொழும்பு | **23** |
| வாரநாள் வகுப்புக்கள் | **24–26** |
| மாலைநேர வகுப்புக்கள் | **27** |
| CTS வடகொழும்பு கல்வி நிலைய வகுப்புகள் | **27–28** |
| **விரிவுரையாளர் விபரங்கள்** | **29–33** |
| **CTS பாடத்திட்டங்கள்** | **34** |
| **சிறுவர் ஊழிய களம்** | **35–36** |

# பொதுவான தகவல்கள்

**CTS பாடநெறிகள்:**

- பொதுவாக கொழும்பு இறையியல் கல்லூரியின் பாடநெறியானது, வாரத்திற்கு ஒரு தடவையாக 13 வாரங்களில் நடாத்தப்படும்.
- குறுங்கால பாடநெறியானது, நான்கு முழுநாட்கள் அடங்கிய அதிக எதிர்பார்ப்புள்ள பாடத்திட்டமாகும்.
- சகல பாடநெறிகளும் 24 வகுப்பறை பாடவேளை மணித்தியாலங்களை கொண்டதாக அமைந்துள்ளதுடன்; சில 36 வகுப்பறை பாடவேளை மணித்தியாலங்களை கொண்ட பாடநெறிகளாக அல்லது 24 வகுப்பறை பாடவேளை மணித்தியாலங்களுடன் 12 மணித்தியாலங்களை கொண்ட பிரயோகப்பயிற்சியையும் உள்ளடக்கிய பாடநெறிகளாகவும் காணப்படும்.

**பாடங்கள் கற்றுக்கொடுக்கப்படும் முறைகள்:**

- **பௌதீகநிலை:** கொஹுவலை மற்றும் வடகொழும்பு CTS வளாகத்தில் நடைபெறும் பாடங்கள்.
- **இயங்கலை:** Zoom வழியாக நடைபெறும் பாடங்கள். இங்கு பாடக்குறிப்புக்களை Moodle வழியாக பெற்றுக்கொள்ளலாம். இதற்கு செயற்திறனுடைய இணையத்தள வசதியும் டிஜிட்டல் சாதனமொன்றும் அவசியம்.
- **கலப்புமுறை:** மேற்குறிப்பிட்ட பௌதீகநிலை, இயங்கலை ஆகிய இரு முறைகளையும் உள்ளடக்கி பாடங்கள் கற்றுக்கொடுக்கப்படும். சில வாரங்கள் உங்கள் வகுப்புக்கள் கொஹுவலை CTS வளாகத்திலும், ஏனைய வாரங்கள் இயங்கலை வழியாகவும் நடத்தப்படும். பாடநெறியின் ஆரம்பத்திலேயே உங்கள் விரிவுரையாளர் இது குறித்த அட்டவணையை உங்களுக்கு அறிய தருவார்.

**CTS பாடநெறி கட்டணங்கள்:**

ஒரு பாடத்திற்கான அறிமுக கட்டணமானது ரூ 7000/= ஆகும்.

* மிகவும் மானிய விலையில் இறையியல் கல்லூரியானது பாடநெறிகளை மாணவர்களுக்கு வழங்குவதற்கு; நமது ஊழிய பங்காளர்கள் மூலம் பெற்ற தாராளமான நிதியுதவிகளே ஏதுவாக அமைகிறது. இந்நன்கொடையை CTS நன்றியுடன் ஏற்றுக்கொள்வதோடு; இந்த விசேட ஏற்பாட்டிற்கு நல்ல உக்கிராணக்காரர்களாக மாணவர்கள் இருக்க வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றனர்.

**CTS பாடநெறிகளுக்கு பதிவு செய்வது எப்படி?**

https://www.cts.lk/online-registration/ எனும் இணையத்தளம் வழியாக பூர்த்தி செய்யப்பட்ட பதிவுப்படிவத்தை அனுப்பவும். உரிய பதிவுக்கட்டணங்களை எமது இணையத்தளத்தில் உள்ள https://www.cts.lk/payment/ என்ற கட்டணம் செலுத்தும் வலைவாசலினூடாக, நிகழ்நிலை வங்கி பணப்பரிமாற்றம், பணப்பற்று அல்லது கடன் அட்டையினூடாக செலுத்தலாம்.
***தயவு செய்து அவதானிக்கவும்:*** *உங்களது பாடத்திற்கான கட்டணம் முழுமையாக செலுத்தப்பட்ட பின்னரே வகுப்பிற்கான உங்களது ஆசனம் ஒதுக்கப்படும்.*

**முக்கிய கவனத்திற்கு:** CTS பாடநெறி ஒன்றிற்கு முதல் தடவையாக பதிவு செய்பவர்கள் தமது சபை போதகரின் சிபாரிசு கடிதத்துடனேயே பதிவினை மேற்கொள்ள வேண்டும்.

**பதிவு செய்யும் நாட்களும் நேரங்களும்:**

குறிப்பிட்ட தவணைக்கான பதிவு செய்யும் இறுதிநாள் அத்தவணையின் ஆரம்ப தினமாகும்.

***தவணை 1: 6-ம் திகதி ஜனவரி 2025***
***தவணை 2: 28-ம் திகதி ஏப்ரல் 2025***
***தவணை 3: 1-ம் திகதி செப்டெம்பர் 2025***

# தவணை 1
# 6 ஜனவரி – 5 ஏப்ரல் 2025

○ பௌதீகநிலை கல்வி | ◻ இயங்கலை கல்வி | ★ கலப்புமுறை கல்வி

# நேர அட்டவணை: தவணை 1 (கொஹுவல)

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |
|---|---|---|---|---|---|
| காலை / பிற்பகல் | ○ **ஆற்றுப்பணி திறன்களுக்கான அறிமுகம்**<br>மு.ப.9:00-11:30<br>நிவேதிதா ஜீவபாலன் | ○ **வேதாகம விளக்கவுரை**<br>மு.ப.9:00-11:30<br>செல்லதுரை ஜோ. சந்ரசேகர் | ○ **கலாத்தியர் நிருபம்**<br>மு.ப.9:00-பி.ப.12:30<br>சர்மிளா சுதாகர்<br>ஐக்கிய வேளை<br>மு.ப.10:30-11:30 | ○ **இலங்கை திருச்சபை வரலாறு**<br>மு.ப.9:00-பி.ப.12:30<br>செல்லதுரை ஜோ. சந்ரசேகர்<br>ஆராதனை வேளை<br>மு.ப.10:30-11:30 | ○ **இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை**<br>மு.ப.9:00-11:00<br>மகேஸ்வரன் மாணிக்கராஜா |
| | ○ **வேதாகம இறையியல்**<br>மு.ப.9:00-11:30<br>பெனட் சுரேந்திரன் | | ★ **நவீன திருத்தூதுப்பணி வரலாறு**<br>பி.ப.3:00-5:15<br>கே. யாபேஸ் | | |
| மாலை | ◻ **திருச்சபை மாதிரிகள்**<br>பி.ப.6:00-9:15<br>கிறிஸ்துமணி செல்லையா | ◻ **பரிசுத்த ஆவியானவரின் ஆட்டத்துவமும் செயற்பாடும்**<br>பி.ப.6:00-8:30<br>ஜுலியன் தேவதாசன் | | | |

முக்கிய குறிப்பு: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க முடியாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம் என்பதை கவனத்தில் கொண்டு பதிவு செய்வதற்கு முன்னர் கல்விசார் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

# நேர அட்டவணை: தவணை 1 (வடகொழும்பு)

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |
|---|---|---|---|---|---|
| காலை | | **திருச்சபையில் கற்பித்தல் பணியை கட்டியெழுப்புதல்**<br>மு.ப.9:00-11:30<br>கிறிஸ்ரி பாலேந்திரன் | **யாத்திராகமம் - உபாகமம்**<br>மு.ப.9:00-11:15<br>கே. யாபேஸ் | | |
| மாலை | | **பிரச்சினையில் உள்ள கிறிஸ்தவ குடும்பங்களுக்கு உதவுதல்**<br>பி.ப.5:30-8:00<br>நிரஞ்ஜனி இராஜரட்ணம் | **கிறிஸ்தவ வரலாறு I**<br>பி.ப.5:45-8:00<br>செல்லதுரை ஜோ. சந்ரசேகர் | | |

முக்கிய குறிப்பு: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க முடியாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம் என்பதை கவனத்தில் கொண்டு பதிவு செய்வதற்கு முன்னர் கல்விசார் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## தவணை 1 | 6 ஜனவரி – 5 ஏப்ரல் 2025

# வாரநாள் வகுப்புகள்

## பௌதீகநிலை கல்வி

### ஆற்றுப்பணி திறன்களுக்கான அறிமுகம்

**BTh|Dip கட்டாயம்**
**COUN கட்டாயம்**

மனவுணர்வு ரீதியான தேவையுள்ளவர்களை சந்திப்பது அன்றாட அனுவங்களில் ஒன்றாகும். இப்பாடமானது ஒரு கிறிஸ்தவர் எவ்வாறு "மக்களுக்கு உதவியாக" இருப்பதற்கு தன்னை தயார்படுத்திக்கொள்வதற்கான வேதாகம அடிப்படையை கற்றுக்கொள்வதற்கு உதவி செய்வதுடன், மக்களுக்கு உதவி செய்வதில் தம்மை முழுமையாக ஈடுபடுத்திக்கொள்வதற்கான அடிப்படை திறன்களை அறிமுகப்படுத்துகிறது.

**குறிப்பு: இப்பாடமானது சில ஆற்றுப்பணி பாடங்களுக்கான முன்நிபந்தனையாகும்.**

10 வாரங்கள்

நாள்: திங்கள்

நேரம்: மு.ப.9:00-11:30

ஆரம்பம்: ஜனவரி 20

திறமை அளவு: 2

விரிவுரையாளர்: **நிவேதிதா ஜீவபாலன்**

### வேதாகம இறையியல்

**BTh கட்டாயம்**
**Dip விருப்பு**

இப்பாடமானது பழைய மற்றும் புதிய ஏற்பாட்டு எழுத்துக்களில் வலியுறுத்தப்பட்டிருக்கும் முக்கிய இறையியல் போதனைகளை உள்ளடக்கியதாகும். தேவன் யார் என்பதை குறித்தும் அவர் எவ்வாறு சிருஷ்டிப்பிலும், புதிய சிருஷ்டிப்பிலும் அவரின் திட்டத்தை வெளிப்படுத்துகின்றார் என்பதை குறித்தும் ஆழமாக அறிய உதவும்.

10 வாரங்கள்

நாள்: திங்கள்

நேரம்: மு.ப.9:00-11:30

ஆரம்பம்: ஜனவரி 20

திறமை அளவு: 2

விரிவுரையாளர்: **பெனட் சுரேந்திரன்**

### வேதாகம விளக்கவுரை

**BTh|Dip கட்டாயம்**

ஒவ்வொரு சந்ததியிற்கும் நிரந்தரமான தேவனின் வார்த்தையே வேதாகமம் என கிறிஸ்தவர்கள் விசுவாசிக்கின்றனர். ஆகவே நாம் சத்திய வசனத்தை சரியான வகையிலே கையாள வேண்டும் என்பது பாரியதொரு சவாலாகும். வேதாகம விளக்கவுரை வேதாகமத்தில் உள்ள வித்தியாசமான மொழி நடைகளை, அதாவது கவிதை, தீர்க்கதரிசனம், கதை, சட்டம் ஆகியவற்றை விளக்குவதற்கான கோட்பாடுகளை மாணவர்களிற்கு கற்றுத்தரும்.

10 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: மு.ப.9:00-11:30

ஆரம்பம்: ஜனவரி 7

திறமை அளவு: 2

விரிவுரையாளர்: **செல்லதுரை ஜோ. சந்ரசேகர்**

## தவணை 1 | 6 ஜனவரி – 5 ஏப்ரல் 2025

# வாரநாள் வகுப்புகள்

## பௌதீகநிலை கல்வி

| | |
|---|---|
| **கலாத்தியர் நிருபம்**<br><br>சுவிசேஷத்துக்கான வரைவிலக்கணமான இப்புத்தமானது ஆதித்திருச்சபை முதலாவது முகம் கொடுத்த துர்உபதேசத்தின் போதனைக்கெதிராக பவுலால் எழுதப்பட்ட நூலாகும். சுவிசேஷம் என்றால் என்ன? சபைக்கு அடிப்படை உபதேசம் ஏன் முக்கியம்? பவுல் யார்? அவருடைய இறையியல் என்ன? போன்ற முக்கிய கேள்விகளுக்கு பதிலளிக்கும் பாடமாக அமையும். | **BTh \| Dip விருப்பு**<br><br>11 வாரங்கள்<br><br>நாள்: புதன்<br><br>நேரம்: மு.ப.9:00-பி.ப.12.30<br><br>ஆரம்பம்: ஜனவரி 8<br><br>திறமை அளவு: 2<br><br>விரிவுரையாளர்:<br>**சர்மிளா சுதாகர்** |

| | |
|---|---|
| **இலங்கை திருச்சபை வரலாறு**<br><br>இலங்கையில் கிறிஸ்தவ மரபுரிமையின் மதிப்பை உணர்ந்து கொள்ள அபூர்வமானதொரு தருணம். இப்பாடத்தினூடாக இலங்கையில் கிறிஸ்தவம் அறிமுகப்படுத்தப்பட்ட நாள் முதல் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், பிரித்தானியர், அமெரிக்க தூதுப்பணியாளர்கள் போன்றோருடைய செயற்பாடுகளை அவதானிப்பதன் ஊடாக தற்போது இலங்கையிலுள்ள சபையின் பல விதமான அமைப்புகள் எவ்வாறு உருவானது என்பதை குறித்தும் அறியக்கூடியதாக இருக்கும். | **BTh \| Dip கட்டாயம்**<br><br>11 வாரங்கள்<br><br>நாள்: வியாழன்<br><br>நேரம்: மு.ப.9:00-பி.ப.12.30<br><br>ஆரம்பம்: ஜனவரி 9<br><br>திறமை அளவு: 2<br><br>விரிவுரையாளர்: **செல்லதுரை ஜோ. சந்ரசேகர்** |

| | |
|---|---|
| **இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கை**<br><br>கிறிஸ்துவையும் அவருடைய போதனைகளையும் வாழ்வையும் அறிந்து அவற்றின் அடிப்படையில் நமது விசுவாசத்தையும் வாழ்க்கையையும் அமைத்து கொள்வதற்கும், இயேசு கிறிஸ்துவின் ஊழிய மாதிரிகளை ஆராய்ந்து, அவற்றை நமது ஊழியத்தின் அடிப்படை மாதிரியாக கொள்வதற்கும் இப்பாடமானது உறுதுணையாக அமையும். | **BTh \| Dip விருப்பு**<br><br>12 வாரங்கள்<br><br>நாள்: வெள்ளி<br><br>நேரம்: மு.ப.9:00-11:00<br><br>ஆரம்பம்: ஜனவரி 10<br><br>திறமை அளவு: 2<br><br>விரிவுரையாளர்:<br>**மகேஸ்வரன் மாணிக்கராஜா** |

## தவணை 1 | 6 ஜனவரி – 5 ஏப்ரல் 2025

# வாரநாள் வகுப்புகள்

## கலப்புமுறை கல்வி

| ### நவீன திருத்தூதுப்பணி வரலாறு | **BTh\|Dip விருப்பு** |
|---|---|
| நவீன மிஷனரி இயக்கத்திற்கு 18-ம் நூற்றாண்டில் வில்லியம் கேரி வித்திட்டார். இப்பாடத்தில் அன்று முதல் இன்று வரையான மிஷனரி இயக்கங்களை ஆய்வு செய்வதுடன் கேரிக்கு முற்பட்ட காலத்து வரலாறும் விபரமாக நோக்கப்படும். இப்பாடத்தில் ஆசிய தூதுப்பணியை கருத்தில் கொண்டு முக்கிய திருத்தூதுப் பணியாளர்கள், தூதுப்பணி அமைப்புக்கள், தூதுப்பணி உபாயங்கள் ஆராயப்படும். | 11 வாரங்கள்<br>நாள்: புதன்<br>நேரம்: பி.ப.3:00-5:15<br>ஆரம்பம்: ஜனவரி 8<br>திறமை அளவு: 2<br>விரிவுரையாளர்:<br>**கே. யாபேஸ்** |

## தவணை 1 | 6 ஜனவரி – 5 ஏப்ரல் 2025

# மாலைநேர வகுப்புகள்

## இயங்கலை கல்வி

| ### பரிசுத்த ஆவியானவரின் ஆட்தத்துவமும் செயற்பாடும் | **BTh\|Dip கட்டாயம்** |
|---|---|
| கடந்த நூற்றாண்டுகளாக பரிசுத்த ஆவியானவரை குறித்த கலந்துரையாடல், அதற்கு முன் வந்த நூற்றாண்டுகளை விட மிக அதிகமாக காணப்படுகின்றது. வேதாகமம் பரிசுத்த ஆவியானவரை குறித்து என்ன போதிக்கின்றது, பரிசுத்த ஆவியானவரை குறித்த கோட்பாடுகள் எவ்வாறு கடந்த நூற்றாண்டுகளினூடாக வளர்ச்சியடைந்தன என்பவற்றை குறித்து கற்றுக்கொள்ள வாருங்கள். விசுவாசியின் வாழ்க்கையில் அவருடைய தனித்துவமான செயலையும் சபையில் அவரது வல்லமையுள்ள பிரசன்னத்தையும் குறித்த ஆழமான அறிவை பெற இப்பாடமானது உதவியாக அமையும்! | 10 வாரங்கள்<br>நாள்: செவ்வாய்<br>நேரம்: பி.ப.6:00-8:30<br>ஆரம்பம்: ஜனவரி 7<br>திறமை அளவு: 2<br>விரிவுரையாளர்:<br>**ஜூலியன் தேவதாசன்** |

## தவணை 1 | 6 ஜனவரி – 5 ஏப்ரல் 2025

# இளமாணிப்பட்டத்திற்கான கருத்தரங்கு பாடம்

## இயங்கலை கல்வி

இக்கருத்தரங்குகளுக்கு பதிவு செய்வதற்கு நீங்கள் இளமாணி அல்லது முதுகலை பட்டப்படிப்பின் மாணவராக பதிவு செய்திருக்க வேண்டும். அல்லது அதற்கு சமமான/ அதற்கு மேலான பட்டத்தை பெற்றவராகவோ இருத்தல் வேண்டும்.

இளமாணி பட்டத்திற்கு பதிவு செய்தவர், ஆகக்குறைந்தது 60 திறமை அளவினை பூர்த்தி செய்த மாணவராக இருத்தல் வேண்டும்.

**BTh கட்டாயம்**

### திருச்சபை மாதிரிகள்

திருச்சபை மாதிரிகளை பற்றியதான இப்பாடத்தில் சபை மாதிரிகளின் சரித்திர, இறையியல் கண்ணோட்டத்தை ஆழமாகவும் விரிவாகவும் கற்றுக்கொள்வதோடு, சபை மாதிரிகள் பின்பற்றும் சாக்கிரமந்துகள் (திருவருட்சாதனங்கள்), ஆராதனை முறைமைகள், சபையின் ஆளுகை முறைகளை மதிப்பாய்வு செய்து கற்றுக்கொள்ளுவதற்கான அரிய வாய்ப்பினையும் வழங்குகிறது.

11 வாரங்கள்

நாள்: திங்கள்

நேரம்: பி.ப.6:00-9:15

ஆரம்பம்: ஜனவரி 6

திறமை அளவு: 3

விரிவுரையாளர்:
**கிறிஸ்துமணி செல்லையா**

## தவணை 1 | 6 ஜனவரி – 5 ஏப்ரல் 2025

# CTS வடகொழும்பு கல்வி நிலைய வகுப்புகள்

## பௌதீகநிலை கல்வி

**BTh|Dip விருப்பு**

### திருச்சபையில் கற்பித்தல் பணியை கட்டியெழுப்புதல்

கிறிஸ்தவ கல்வியுடன் தொடர்புபட்ட திருச்சபையில் ஓய்வுநாள் பாடசாலை, வாலிபர் குழுக்கள், வேதாகம படிப்பு குழுக்கள் போன்றவற்றில் கற்பித்தல் ஊழியங்களில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு இப்பாடமானது கற்பித்தல் பணியை குறித்து வேதாகமம் கூறுவதை கற்றுத்தருவதுடன், நீங்கள் கற்பிக்கிற இலக்கு குழுவிற்கேற்ப பயிற்சி திட்டத்தினை வடிவமைத்து, அவர்களது வாழ்க்கையை மாற்றத்தக்க விதமாக அவர்களுக்கு கற்றுக்கொடுப்பதற்கும் உதவி செய்யும்.

10 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: மு.ப.9:00-11:30

ஆரம்பம்: ஜனவரி 7

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**கிறிஸ்ரி பாலேந்திரன்**

## தவணை 1 | 6 ஜனவரி – 5 ஏப்ரல் 2025

# CTS வடகொழும்பு கல்வி நிலைய வகுப்புகள்

## பௌதீகநிலை கல்வி

### யாத்திராகமம் - உபாகமம்

**BTh|Dip விருப்பு**

பண்டைய இஸ்ரவேலரின் ஆரம்பம், அடிமைத்தனம், உருவாக்கம் பற்றி பெரிதும் அறியத்தரும் பஞ்சாகமத்தின் (மோசேயின் புத்தகங்கள்) முக்கியமான பகுதிகளை கற்பதற்கு இந்த பாடநெறியானது உங்களுக்கு சந்தர்ப்பத்தை வழங்கும். ஒவ்வொரு புத்தகத்தின் தன்மைகள், அமைப்புகள், இஸ்ரவேல் இனத்திற்கான அதன் செய்தி மற்றும் அவற்றை இன்று எவ்வாறு நாம் நடைமுறைப்படுத்தலாம் போன்ற விடயங்கள் ஆராயப்படும்.

11 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: மு.ப.9:00-11:15

ஆரம்பம்: ஜனவரி 8

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**கே. யாபேஸ்**

### பிரச்சினையில் உள்ள கிறிஸ்தவ குடும்பங்களுக்கு உதவுதல்

**BTh|Dip விருப்பு**

அனைத்து குடும்பங்களும் பல குறுகிய மற்றும் நீண்டகால நெருக்கடிக்களுக்கூடாக கடந்து செல்கின்றன. இப்பாடநெறியானது நீங்கள் எவ்வாறு குடும்பங்களுடன் இணைந்து, சிக்கலான மற்றும் சவாலான பிரச்சினைகளை தீர்க்க அவர்களுக்கு உதவ முடியும் என்பதையும், அவர்கள் பிரிந்து செல்லாமல் வலுவான குடும்பமாக வளர செய்வதற்கு உதவும் அவசியமான விடயங்களையும் ஆராய்கிறது.

10 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: பி.ப.5:30-8:00

ஆரம்பம்: ஜனவரி 7

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**நிரஞ்ஜனி இராஜரட்ணம்**

### கிறிஸ்தவ வரலாறு I
**(கி.பி. 100 - கி.பி. 1517)**

**BTh|Dip கட்டாயம்**

திருச்சபையின் ஆரம்பம் முதல் சீர்திருத்தம் வரையிலான காலப்பகுதியை உள்ளடக்கிய இப்பாடமானது கி.பி.1 முதல் கி.பி.1400 வருடங்களில் திருச்சபையானது விரிவடைந்த விதங்கள், அதை வடிவமைத்த இறையியல்கள், திருச்சபை பிதாக்கள், இரத்தசாட்சிகள், துறவிகள், அருட்பணியாளர்கள், கிறிஸ்தவ இயக்கங்களை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்துகிறது.

11 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: பி.ப.5:45-8:00

ஆரம்பம்: ஜனவரி 8

திறமை அளவு: 2

விரிவுரையாளர்: **செல்லதுரை ஜோ. சந்ரசேகர்**

# தவணை 2

# 28 ஏப்ரல் – 2 ஓகஸ்ட் 2025

○ பௌதீகநிலை கல்வி | ◘ இயங்கலை கல்வி | ★ கலப்புமுறை கல்வி

# நேர அட்டவணை: தவணை 2 (கொஹுவல)

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |
|---|---|---|---|---|---|
| காலை | ○ **ஊழியத்திற்கான தனிப்பட்ட மற்றும் ஆவிக்குரிய உருவாக்கம்**<br>மு.ப.9:00-11:30<br>நிவேதிதா ஜீவபாலன் | ○ **கற்கை முறைகள்**<br>மு.ப.9:00-11:30<br>செல்லதுரை ஜோ. சந்ரசேகர் | ○ **தலைமைத்துவம்**<br>மு.ப.9:00-பி.ப.12:30<br>இரா. ஹரிஹரன்<br>ஐக்கிய வேளை<br>மு.ப.10:30-11:30 | ○ **ரோமருக்கு எழுதிய நிருபம்**<br>மு.ப.9:00-பி.ப.12:30<br>ஜுலியன் தேவதாசன்<br>ஆராதனை வேளை<br>மு.ப.10:30-11:30 | ○ **பழைய ஏற்பாட்டிற்கான அறிமுகம்**<br>மு.ப.9:00-11:00<br>வனஜா ராஜ்குமார் |
| பிற்பகல் | ★ **வழிபாடு பற்றிய இறையியல்**<br>பி.ப.3:00-5:15<br>யொஹான் கிருஷ்ணகுமார் | ★ **ஆவிக்குரிய வரங்கள்**<br>பி.ப.3:00-5:30<br>காமினி ஜயந்த | ★ **மேய்ப்பத்துவ பராமரிப்பு**<br>பி.ப.3:00-5:00<br>கே. யாபேஸ் | ○ **பாலியல் பற்றிய அறநெறி**<br>பி.ப.3:00-5:30<br>கிறிஸ்ரி பாலேந்திரன் | |

முக்கிய குறிப்பு: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க முடியாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம் என்பதை கவனத்தில் கொண்டு பதிவு செய்வதற்கு முன்னர் கல்விசார் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

# நேர அட்டவணை: தவணை 2 (வட கொழும்பு)

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |
|---|---|---|---|---|---|
| காலை | | **திருத்தூதுப் பணிக்கான அறிமுகம்**<br>மு.ப.9:00-11:30<br>ஜூலியன் தேவதாசன் | **1, 2 இராஜாக்கள்**<br>மு.ப.9:00-11:00<br>எஸ். கதிரேசப்பிள்ளை | | |
| மாலை | | **வேதாகமத்திலிருந்து ஜெபிக்க கற்றுக்கொள்ளல்**<br>பி.ப.5:30-8:00<br>கிறிஸ்துமணி செல்லையா | **இஸ்ரவேலரின் வரலாறு**<br>பி.ப.6:00-8:00<br>ஞா. ஸ்டன்லி நெல்சன் | | |

முக்கிய குறிப்பு: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க முடியாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம் என்பதை கவனத்தில் கொண்டு பதிவு செய்வதற்கு முன்னர் கல்விசார் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

## தவணை 2 | 28 ஏப்ரல் – 2 ஓகஸ்ட் 2025

# வாரநாள் வகுப்புகள்

## பௌதீகநிலை கல்வி

### ஊழியத்திற்கான தனிப்பட்ட மற்றும் ஆவிக்குரிய உருவாக்கம்

வினைத்திறனான ஊழியத்திற்கும் மற்றும் நாம் தேவபக்தியுடன் இருப்பதற்கும் தனிப்பட்ட ஆவிக்குரிய உருவாக்கமும் வளர்ச்சியும் இன்றியமையாததாகும். இந்த பாடநெறியானது, மாணவரை சபைக்குள் தனித்துவமான ஊழியத்தின் ஆயத்தப்படுத்தலுக்கான சுய பிரதிபலிப்பின் ஆவிக்குரிய பயணத்திற்கு கொண்டு செல்கிறது. தம்மை, கடவுள் மற்றும் பிறருடனான உறவை புரிந்து கொள்வதில் வளர்வதே இதன் இலக்காகும். இவ்வளர்ச்சி அனுபவத்தின் பகுதியாக சிறுகுழு கலந்துரையாடல்கள் இடம்பெறும்.

**BTh|Dip விருப்பு**
**COUN கட்டாயம்**

10 வாரங்கள்

நாள்: திங்கள்

நேரம்: மு.ப.9:00-11:30

ஆரம்பம்: மே 5

திறமை அளவு: 2

விரிவுரையாளர்: **நிவேதிதா ஜீவபாலன்**

### கற்கை முறைகள்

இப்பாடமானது கொழும்பு இறையியல் கல்லூரியின் பாடநெறிகளையும், அவற்றை பூர்த்தி செய்வதற்கான தேவைப்பாடுகளையும் குறித்து விளக்கம் அளிக்கின்றது. இது குறிப்பெடுத்தல், விரைவாக வாசித்தல், ஆய்வு செய்தல், ஒப்படை மற்றும் கட்டுரை எழுதுதல், பரீட்சைக்கான மீட்டல் போன்ற விடயங்களை முன்னெடுப்பதற்கு உங்களை ஆயத்தப்படுத்துவதோடு, நீங்கள் ஒரு சிறந்த மாணவராக திகழவும் உதவி செய்யும்.

**BTh|Dip கட்டாயம்**

10 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: மு.ப.9:00-11:30

ஆரம்பம்: ஏப்ரல் 29

திறமை அளவு: 0 (2)

விரிவுரையாளர்: **செல்லதுரை ஜோ. சந்ரசேகர்**

### தலைமைத்துவம்

இன்றைய சமூகம் தலைமைத்துவம் குறித்து பல சிந்தனைகளால் நிறைந்திருக்கின்றது. வேதாகம ரீதியாக ஏற்றுக்கொள்ளக்கூடிய தலைமைத்துவ கோட்பாடுகள் எவை என்பதை ஒரு கிறிஸ்தவன் எவ்வாறு இனங்காண முடியும்? இப்பாடநெறியானது உங்களுடைய ஊழியம், வேலைத்தளம், வீடு போன்ற சூழ்நிலைகளில் எவ்வாறு தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய தலைவனாக சிறந்து விளங்க முடியும் என்பதை கற்றுக்கொள்ள வாய்ப்பளிக்கின்றது.

**BTh|Dip கட்டாயம்**

12 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: மு.ப.9:00-பி.ப.12:30

ஆரம்பம்: ஏப்ரல் 30

திறமை அளவு: 2

விரிவுரையாளர்: **இரா. ஹரிஹரன்**

# வாரநாள் வகுப்புகள்

## பௌதீகநிலை கல்வி

### ரோமருக்கு எழுதிய நிருபம்

**BTh கட்டாயம்**
**Dip விருப்பு**

ரோமருக்கு எழுதிய நிருபம் அகஸ்டீன், மார்ட்டீன் லூத்தர், ஜோன் வெஸ்லி, கார்ள் பார்த் போன்றவர்களின் வாழ்க்கையில் ஆழமான மாற்றங்களை உருவாக்கியது. இஸ்ரவேல், ஜாதிகள் மற்றும் சிருஷ்டிப்பிற்கான மீட்பிற்கு தேவன் வைத்திருந்த திட்டத்தை குறித்து பவுல் இந்நிருபத்தில் அறிய தருகின்றார். கிறிஸ்துவின் சிலுவையினூடாக தேவன் எவ்வாறு அவருடைய அன்பையும், நீதியையும் நிலை நிறுத்துகின்றார் என்பதை விளங்கிக்கொள்ள ஏதுவாக இருப்பதுடன், எம்முடைய நாளாந்த வாழ்க்கைக்கு எவ்வாறு அர்த்தமுள்ளதாக அமைகின்றது என்பதையும் அறிந்து கொள்ளலாம்.

10 வாரங்கள்

நாள்: வியாழன்

நேரம்: மு.ப.9:00-பி.ப.12:30

ஆரம்பம்: மே 8

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**ஜூலியன் தேவதாசன்**

### பாலியல் பற்றிய அறநெறி

**BTh | Dip விருப்பு**

மானிட பாலியலை குறித்த பல்வேறு பிரச்சினைகளை வேதாகம கண்ணோட்டத்தில் இப்பாடமானது ஆய்வு செய்யும். இப்பாடத்தில் பாலியலை குறித்த வேதாகம கண்ணோட்டத்துக்கு விளக்கமளித்து, பாலினம், பாலியல் அபிலாசைகள், பாலியல் வரம்புகள் அத்துடன் ஆபாச படங்களுக்கு அடிமையாதல் குறித்த பிரச்சினைகள் ஆராயப்பட்டு ஆரோக்கியமான பாலியல் உறவை மேம்படுத்துவதில் அவதானம் செலுத்துகிறது.

10 வாரங்கள்

நாள்: வியாழன்

நேரம்: பி.ப.3:00-5:30

ஆரம்பம்: மே 8

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**கிறிஸ்ரி பாலேந்திரன்**

### பழைய ஏற்பாட்டிற்கான அறிமுகம்

**BTh | Dip கட்டாயம்**

பழைய ஏற்பாட்டை புரிந்து கொள்வது கடினமாக உள்ளதா? கவலை வேண்டாம்! இப்பாடம் பழைய ஏற்பாட்டின் ஒவ்வொரு நூலினதும் ஆசிரியர், செய்தி, கட்டமைப்பு, பிரதான கருப்பொருட்கள் மற்றும் வரலாற்று சூழ்நிலை ஆகியவற்றை குறித்து சிறந்த கண்ணோட்டத்தை நீங்கள் பெற்றுக்கொள்ள துணை புரியும். இயேசு கிறிஸ்துவின் கைகளில் தவழ்ந்த வேதாகமத்தில் உள்ளடங்கியிருந்த பல வகைப்பட்ட புத்தகங்களின் பெறுமதியை உணரவும் அனுபவிக்கவும் இப்பாடம் உதவியாக அமையும்.

12 வாரங்கள்

நாள்: வெள்ளி

நேரம்: மு.ப.9:00-11:00

ஆரம்பம்: மே 2

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**வனஜா ராஜ்குமார்**

# தவணை 2 | 28 ஏப்ரல் – 2 ஓகஸ்ட் 2025

# வாரநாள் வகுப்புகள்

## கலப்புமுறை கல்வி

## வழிபாடு பற்றிய இறையியல்

**BTh|Dip கட்டாயம்**

தற்கால சபையானது ஆராதனை மீது அதீத நாட்டமுள்ளதாயிருக்கிறது. தேவனை கனப்படுத்தும் ஆராதனையை குறித்து வேதாகமம் எதனை கற்பிக்கிறது? இப்பாடமானது காயீன், ஆபேலின் ஆராதனையிலிருந்து, பழைய ஏற்பாட்டு பலி ஆராதனை, இஸ்ரவேலின் சங்கீதங்களின் பின்னணியில் புதிய ஏற்பாட்டு ஆராதனையையும் நடைமுறைகளையும் புரிந்துகொள்ள உதவும். வேதாகம கோட்பாடுகளின் அடிப்படையில் உங்களது ஸ்தல சபையின் ஆராதனையை மதிப்பீடு செய்ய இப்பாடமானது உதவி செய்யும்.

11 வாரங்கள்

நாள்: திங்கள்

நேரம்: பி.ப.3:00-5:15

ஆரம்பம்: ஏப்ரல் 28

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**யொஹான் கிருஷ்ணகுமார்**

## ஆவிக்குரிய வரங்கள்

**BTh|Dip விருப்பு**

இன்று திருச்சபைகளில் ஆவிக்குரிய வரங்களை குறித்து அதிக ஆர்வமும் அநேக கருத்துக்களும் நிலவுகின்றன. இவற்றை குறித்த வேதாகம போதனைகளை புரிந்து பல்வேறுபட்ட வரங்களின் விளக்கங்களையும் பயனையும் பிரயோகத்தையும் ஆராய்வதற்கான அரியதோர் சந்தர்ப்பமாகும். உங்கள் வரங்களை அடையாளம் காணவும், கிறிஸ்துவிற்காக வல்லமையாக பிரகாசிக்கவும் இப்பாடமானது உறுதுணையாக அமையும்.

10 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: பி.ப.3:00-5:30

ஆரம்பம்: ஏப்ரல் 29

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**காமினி ஜயந்த**

## மேய்ப்பத்துவ பராமரிப்பு

**BTh|Dip விருப்பு**

தேவனுடைய ஜனங்களுக்கு பராமரிப்பு அவசியமானது என வேதாகமம் வலியுறுத்துகின்றது. அத்துடன் கிறிஸ்தவ தலைவனை ஒரு மேய்ப்பனாகவும் சித்தரிக்கின்றது. தலைமைத்துவத்தில் இருக்கும் கிறிஸ்தவர்கள் தங்களுடைய பணிச்சூழ்நிலைகளில் மேய்பத்துவ பராமரிப்பை செய்ய தயாராக இருக்க வேண்டும். இப்பாடமானது ஆவிக்குரிய போஷிப்பு, வீட்டு சந்திப்பு, ஒழுக்க நடவடிக்கை, சீர்பொருத்துதல், ஞானஸ்நானம், திருமணம், மரணச்சடங்கு போன்ற முக்கிய மேய்ப்பத்துவ பராமரிப்புகளை குறிப்பாக ஆராயும்.

12 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: பி.ப.3:00-5:00

ஆரம்பம்: ஏப்ரல் 30

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**கே. யாபேஸ்**

## தவணை 2 | 28 ஏப்ரல் – 2 ஓகஸ்ட் 2025

# CTS வடகொழும்பு கல்வி நிலைய வகுப்புகள்

## பௌதீகநிலை கல்வி

### திருத்தூதுப்பணிக்கான அறிமுகம்

BTh|Dip கட்டாயம்

“திருத்தூதுப்பணி” எனும் வார்த்தையை அனைத்து கிறிஸ்தவர்களும் அறிந்திருந்தாலும், அதை குறித்த சரியான தெளிவின்மை இன்றும் காணப்படுகிறது. இப்பாடமானது திருத்தூதுப்பணி என்றால் என்ன என்பதை வரலாற்று ரீதியாக பல கோணங்களில் ஆராய்ந்து, ஏற்படும் சவால்கள் மத்தியில் தேவனின் திருத்தூதுப் பணியினை முன்னெடுப்பதற்கு நீங்களும், உங்கள் திருச்சபையும் தனித்துமான பங்களிப்பினை வழங்குவதற்கு தயார்படுத்துகிறது.

10 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: மு.ப.9:00-11:30

ஆரம்பம்: ஏப்ரல் 29

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**ஜூலியன் தேவதாசன்**

### 1, 2 இராஜாக்கள்

BTh|Dip விருப்பு

முடியாட்சியின் எழுச்சியும், தோல்வியும், இராஜாக்களின் வரலாறுகள் மற்றும் இஸ்ரவேலரின் சரித்திரத்திற்கு அப்பாற்பட்ட அநேக விடயங்கள் இப்பகுதியில் அடங்கியிருக்கிறது. தேவன் எவ்விதம் இஸ்ரவேலருடன் பேசினார் என்பதையும், தலைமைத்துவம், விக்கிரக ஆராதனை, வன்முறை, தீர்க்கதரிசன பணிகளின் ஆரம்பம், கடவுளுடைய இராஜ்யத்திற்கு மக்கள் வழிநடத்தப்பட்ட விதம் என்பவற்றையும் இப்பாடத்தில் கற்றுக்கொள்ளலாம்.

12 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: மு.ப.9:00-11:00

ஆரம்பம்: ஏப்ரல் 30

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**எஸ். கதிரேசப்பிள்ளை**

### வேதாகமத்திலிருந்து ஜெபிக்க கற்றுக்கொள்ளல்

BTh|Dip விருப்பு

எமது ஜெப வாழ்விற்கான சிறந்த முன்மாதிரி இயேசு கிறிஸ்து ஆவார். இப்பாடமானது இயேசு கிறிஸ்துவினுடைய ஜெப வாழ்க்கையையும் வேதாகமத்திலுள்ள தேவ மனுஷர்களின் ஜெபங்களையும் குறித்து ஆராய்வதோடு, நாம் எப்படி ஜெபிக்க வேண்டும்? எதற்காக ஜெபிக்க வேண்டும்? மற்றவர்களை ஜெபத்தில் எவ்வாறு வழிநடத்த வேண்டும்? என்பது போன்ற பல கேள்விகளுக்கான பதிலாகவும் அமையும்.

10 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: பி.ப.5:30-8:00

ஆரம்பம்: ஏப்ரல் 29

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**கிறிஸ்துமணி செல்லையா**

## தவணை 2 | 28 ஏப்ரல் – 2 ஒகஸ்ட் 2025

# CTS வடகொழும்பு கல்வி நிலைய வகுப்புகள்

## பௌதீகநிலை கல்வி

| இஸ்ரவேலரின் வரலாறு | BTh \| Dip விருப்பு |
| --- | --- |
| இஸ்ரவேலின் உண்மையான சரித்திரத்தை பின்னணியாக கொண்டதே பழைய ஏற்பாடாகும். ஆபிரகாம் தொடக்கம் பார் கோக்பா கலவரம் மட்டும் நடந்த முக்கிய விடயங்களிற்கு இஸ்ரவேலின் சரித்திரம் உங்களை அறிமுகப்படுத்தும்; யூத சரித்திரத்தின் பின்னணியில் வேதாகமத்தை விளங்கிக்கொள்வதற்கு உங்களுக்கு துணை புரியும். | 12 வாரங்கள்<br>நாள்: புதன்<br>நேரம்: பி.ப.6:00-8:00<br>ஆரம்பம்: ஏப்ரல் 30<br>திறமை அளவு: 2<br>விரிவுரையாளர்:<br>**ஞா. ஸ்டன்லி நெல்சன்** |

# தவணை 3

# 1 செப்டெம்பர் – 29 நவம்பர் 2025

○ பௌதீகநிலை கல்வி | ◘ இயங்கலை கல்வி | ★ கலப்புமுறை கல்வி

# நேர அட்டவணை: தவணை 3 (கொஹுவல)

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |
|---|---|---|---|---|---|
| காலை | ○ **அடிப்படை ஆலோசனை நுட்பங்கள் மற்றும் நெறிமுறைகள்**<br>மு.ப.9:00-11:30<br>நிவேதிதா ஜீவபாலன் | ○ **அரசியல் பற்றிய இறையியல்**<br>மு.ப.9:00-11:00<br>செல்லதுரை ஜோ. சந்ரசேகர் | ○ **திருச்சபையியலும் இறுதியியலும்**<br>மு.ப.9:00-பி.ப.12:30<br>ஜுலியன் தேவதாசன்<br>ஐக்கிய வேளை<br>மு.ப.10:30-11:30 | ○ **கிறிஸ்தவ வரலாறு III**<br>மு.ப.9:00-பி.ப.12:30<br>செல்லதுரை ஜோ. சந்ரசேகர்<br>ஆராதனை வேளை<br>மு.ப.10:30-11:30 | ○ **கிறிஸ்தவ உலகநோக்கை மேம்படுத்தல்**<br>மு.ப.9:00-11:15<br>ஜுலியன் தேவதாசன் |
| பிற்பகல் | | ★ **ஏசாயா**<br>பி.ப.3:00-5:00<br>காமினி ஜயந்த | ○ **கிறிஸ்தவ பணியாளரின் வாழ்வும் பணியும்**<br>பி.ப.3:00-5:15<br>கிறிஸ்துமணி செல்லையா | ○ **தொழில்சார் அறநெறி**<br>பி.ப.3:00-5:00<br>கிறிஸ்ரி பாலேந்திரன் | |
| மாலை | | | | | ◘ **ரூத் மற்றும் நியாயாதிபதிகள்**<br>பி.ப.6:00-8:15<br>வி. கிறிஷாந்தி சந்ரசேகர் |

முக்கிய குறிப்பு: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க முடியாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம் என்பதை கவனத்தில் கொண்டு பதிவு செய்வதற்கு முன்னர் கல்விசார் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

# நேர அட்டவணை: தவணை 3 (வடகொழும்பு)

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி |
|---|---|---|---|---|---|
| காலை | | **சிறிய தீர்க்கதரிசிகள்**<br>மு.ப.9:00-11:00<br>சர்மிளா சுதாகர் | **சுதேசிய கிறிஸ்தவம்**<br>மு.ப.9:00-11:15<br>கிறிஸ்டி சாமுவேல் | | |
| மாலை | | **வேதாகம அறநெறி**<br>பி.ப.6:00-8:00<br>இரா. ஹரிஹரன் | **அப்போஸ்தலருடைய நடபடிகள்**<br>பி.ப.5:45-8:00<br>வனஜா ராஜ்குமார் | | |

முக்கிய குறிப்பு: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க முடியாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம் என்பதை கவனத்தில் கொண்டு பதிவு செய்வதற்கு முன்னர் கல்விசார் காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

# வாரநாள் வகுப்புகள்

## பௌதீகநிலை கல்வி

### அடிப்படை ஆலோசனை நுட்பங்கள் மற்றும் நெறிமுறைகள்

**BTh|Dip விருப்பு**
**COUN கட்டாயம்**

இப்பாடமானது ஆலோசனையில் அடிப்படை கொள்கைகளான நம்பிக்கையை கட்டியெழுப்புதல், செயல்திறனாக செவிமடுத்தல், நெறிமுறை நடத்தை போன்ற பலதை ஆராய்வதோடு, வாடிக்கையாளரின் இரகசியத்தன்மையினை பராமரித்து அவர்களுக்கு ஆதரவான சூழலை எவ்வாறு உருவாக்குவது என்பதையும் கற்றுக்கொள்ள உதவும். வினைத்திறனான தகவல் தொடர்பு, மற்றவர்களின் உணர்வுகளை புரிந்துகொள்ளும் ஆர்வமுள்ள மக்கள் உதவியாளர்களுக்கு இப்பாடமானது உதவி செய்கிறது.

**முன்நிபந்தனை: ஆற்றுப்பணிக்கான அறிமுகம்**

10 வாரங்கள்

நாள்: திங்கள்

நேரம்: மு.ப.9:00-11:30

ஆரம்பம்: செப்டெம்பர் 8

திறமை அளவு: 2

விரிவுரையாளர்: **நிவேதிதா ஜீவபாலன்**

### அரசியல் பற்றிய இறையியல்

**BTh|Dip விருப்பு**

**திருச்சபை, அரசு, சமூகம்**

தேவனுக்கு நம்பகமாக இருக்கும் அதேவேளையில் சபையானது உலகத்தோடும் ஈடுபட வேண்டும் என்பதே இயேசு கிறிஸ்துவின் எதிர்பார்ப்பாக இருந்தது. எனவே சபையானது அரசோடு ஈடுபடுவதோடு சமூகத்தில் ஒரு தாக்கத்தை உருவாக்க வேண்டும். சபை இதனை எவ்வாறு நேர்மையாக செய்ய முடியும்? இப்பாடமானது அரசு மற்றும் சமூகத்துடனான சபையின் உறவிற்கான வரையறைகளை முன்வைக்கின்றது.

12 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: மு.ப.9:00-11:00

ஆரம்பம்: செப்டெம்பர் 2

திறமை அளவு: 2

விரிவுரையாளர்: **செல்லதுரை ஜோ. சந்ரசேகர்**

### திருச்சபையியலும் இறுதியியலும்

**BTh கட்டாயம்**
**Dip விருப்பு**

சபையாக இருத்தல் என்பதை நாம் எவ்வாறு விளங்கி கொள்கின்றோம்? அது பாரம்பரியங்களா அல்லது கட்டிடங்களா அல்லது வழிபாட்டு முறைகளா? நாம் அறிந்திருக்கும் உலகம் எவ்வாறு முடிவடையும்? சபையியலும், இறுதியியலும் சபையை குறித்தும், இறுதி காலத்தை குறித்தும் சபையின் முக்கிய போதனைகளை ஆராயும் ஒரு பாடநெறியாகும். இப்பாடநெறி உங்களுக்கு உங்கள் சபையுடன் இருக்கும் ஐக்கியத்தை ஆழமாக்கி ஒன்றாக இயங்க தூண்டுவது மட்டுமல்லாது வரவிருக்கும் விடயங்களை குறித்தும் விளங்கிக்கொள்ள உதவும் முக்கியமான பாடமாகும். இப்பாடத்தினை தவற விடாது கட்டாயமாக கற்றுக்கொள்ளுங்கள்.

11 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: மு.ப.9:00-பி.ப.12:30

ஆரம்பம்: செப்டெம்பர் 3

திறமை அளவு: 2

விரிவுரையாளர்: **ஜூலியன் தேவதாசன்**

# தவணை 3 | 1 செப்டெம்பர் – 29 நவம்பர் 2025

# வாரநாள் வகுப்புகள்

## பௌதீகநிலை கல்வி

| | |
|---|---|
| **கிறிஸ்தவ பணியாளரின் வாழ்வும் பணியும்**<br><br>இப்பாடமானது ஒரு கிறிஸ்தவ ஊழியனின் தனித்துவமான அழைப்பை விளங்கி கொள்வதற்கு உதவியாகவிருக்கும். நீங்கள் சபையிலும், சமுதாயத்திலும் கிறிஸ்தவ ஊழியனாக பயனளிக்கிறவராக எவ்வாறு இருக்கலாம் என்பதையும், தலைவராக முன்னேற்றமடையும்போது ஆவிக்குரிய வாழ்க்கையில் வளருதல், ஆரோக்கியமான குடும்ப உறவுகளை நடைமுறைப்படுத்துதல் ஆகியவற்றை குறித்தும் இப்பாடத்தினூடாக கற்றறிந்து கொள்ளலாம். | **BTh\|Dip விருப்பு**<br><br>11 வாரங்கள்<br><br>நாள்: புதன்<br><br>நேரம்: பி.ப.3:00-5:15<br><br>ஆரம்பம்: செப்டெம்பர் 3<br><br>திறமை அளவு: 2<br><br>விரிவுரையாளர்: **கிறிஸ்துமணி செல்லையா** |

| | |
|---|---|
| **கிறிஸ்தவ வரலாறு III**<br>**(19-ம், 20-ம் நூற்றாண்டுகள்)**<br><br>"தனது சரித்திரத்தை அறியாத ஒரு சமூகம் ஞாபகமற்ற ஒரு மனிதனுக்கு சமம்". சரித்திரத்தில் சபை கண்ட வெற்றிகளையும் தோல்விகளையும், தேவனின் செயற்பாட்டையும் கிறிஸ்தவர்கள் அறிந்திருப்பது அவசியமானது. இப்பாடமானது 1800 இலிருந்து இன்று வரையான காலப்பகுதியின் திருச்சபையின் செயற்பாட்டையும் முன்னேற்றத்தையும் ஆராய்கின்றது. | **BTh\|Dip கட்டாயம்**<br><br>12 வாரங்கள்<br><br>நாள்: வியாழன்<br><br>நேரம்: மு.ப.9:00-பி.ப.12:30<br><br>ஆரம்பம்: செப்டெம்பர் 4<br><br>திறமை அளவு: 2<br><br>விரிவுரையாளர்: **செல்லதுரை ஜோ. சந்ரசேகர்** |

| | |
|---|---|
| **தொழில்சார் அறநெறி**<br><br>எல்லோருக்கும் தொழில் அத்தியாவசியமானது. வேலை நாட்களில் முக்கியமாக பெருமளவு நேரத்தை அதனுடனேயே கழிக்கின்றோம். எனவே வேலைத்தளத்திலோ வியாபாரத்திலோ ஒரு கிறிஸ்தவன் எவ்வாறு செயற்பட வேண்டுமென்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். இப்பாடத்தில் ஒரு கிறிஸ்தவன் எவ்வாறான தொழிலை தெரிவு செய்ய வேண்டும்? குறித்த சில தொழிற்துறைகளில் கிறிஸ்தவர்கள் ஈடுபடலாமா, முடியாதா? தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுவது சரியா, தவறா? போன்ற சுவாரஸ்யமான கேள்விகளும் ஆராயப்படும். தொழிலில் திருப்தியற்று அழுத்தங்களோடு காணப்படுகின்றீர்களா? நீங்களும் வாருங்கள், பதில் காண்போம். | **BTh\|Dip விருப்பு**<br><br>12 வாரங்கள்<br><br>நாள்: வியாழன்<br><br>நேரம்: பி.ப.3:00-5:00<br><br>ஆரம்பம்: செப்டெம்பர் 4<br><br>திறமை அளவு: 2<br><br>விரிவுரையாளர்: **கிறிஸ்ரி பாலேந்திரன்** |

## தவணை 3 | 1 செப்டெம்பர் – 29 நவம்பர் 2025

# வாரநாள் வகுப்புகள்

## பௌதீகநிலை கல்வி

| கிறிஸ்தவ உலகநோக்கை மேம்படுத்தல் | BTh\|Dip கட்டாயம் |
| --- | --- |
| "உலக நோக்கு என்பது ஒரு ஜோடி கண்ணாடிகளை போன்றது. அது நாம் பார்ப்பதையல்ல, அதனூடாக பார்ப்பதையே குறிக்கிறது" (போல் ஹிபேர்ட்). கிறிஸ்தவ சிந்தனைக்கூடாக எம்முடைய சிந்தனைகளையும் மனப்பான்மையையும் மதிப்பீடு செய்வதன் முக்கியத்துவத்தை இப்பாடமானது ஆராய்கின்றது. உங்கள் தெரிவுகளும் நீங்கள் எடுக்கும் முடிவுகளும் உலகத்திற்கு ஒத்ததாக இருக்காமல் அதிலிருந்து விடுதலை பெறவும், உங்களில் ஆழமான மாற்றம் ஏற்படவும் இது வழிவகுக்கும் என்பது நிச்சயம். | 11 வாரங்கள்<br>நாள்: வெள்ளி<br>நேரம்: மு.ப.9:00-11:15<br>ஆரம்பம்: செப்டெம்பர் 12<br>திறமை அளவு: 2<br>விரிவுரையாளர்:<br>**ஜூலியன் தேவதாசன்** |

## கலப்புமுறை கல்வி

| ஏசாயா | BTh\|Dip விருப்பு |
| --- | --- |
| இந்த அற்புதமான தீர்க்கதரிசியின் சரித்திர பின்னணி, எழுத்தாளர், விமர்சனம் செய்யக்கூடிய விடயங்கள், ஏசாயாவின் செய்தியும் இன்றைய தினத்திற்கு அதனை எவ்வாறு பிரயோஜனப்படுத்த முடியும் என்ற விடயங்களை உள்ளடக்கியதாக இருக்கின்றது. தேவனின் மகத்துவமுள்ள வர்ணனைகள், வரவிருக்கும் மேசியாவை குறித்த எதிர்வுகூறல்கள், அவருடைய இராஜ்யம் முழுமையாக்கப்படும் திட்டங்கள் ஆகியவற்றை குறித்து அறிந்துகொள்ளக்கூடியதாக இருக்கும். | 12 வாரங்கள்<br>நாள்: செவ்வாய்<br>நேரம்: பி.ப.3:00-5:00<br>ஆரம்பம்: செப்டெம்பர் 2<br>திறமை அளவு: 2<br>விரிவுரையாளர்:<br>**காமினி ஜயந்த** |

## தவணை 3 | 1 செப்டெம்பர் – 29 நவம்பர் 2025

# மாலைநேர வகுப்புகள்

## இயங்கலை கல்வி

| ### ரூத் மற்றும் நியாயாதிபதிகள் | BTh\|Dip விருப்பு |
|---|---|
| ரூத் மற்றும் நியாயாதிபதிகள், வன்முறைகள், தந்திரங்கள், ஏமாற்றம் மற்றும் வீரத்தன்மை செயல்கள் நிறைந்த காலப்பகுதியாகும். இத்தகைய காலகட்டத்தில் ரூத் மற்றும் தெபோராள் போன்ற சிலர் தனித்துவமாக நிலைத்து வித்தியாசத்தை ஏற்படுத்தினர். தேவனுக்கு விசுவாசமாக இருப்பதற்கு நமக்குள்ள சவால்களையும், இப்புத்தகத்தின் மூலம் நமது பெலவீனங்களுக்கு எவ்வாறு முகம் கொடுக்க வேண்டும் என்பதையும் அறிந்து கொள்ளலாம். | 11 வாரங்கள்<br>நாள்: வெள்ளி<br>நேரம்: பி.ப.6:00-8:15<br>ஆரம்பம்: செப்டெம்பர் 12<br>திறமை அளவு: 2<br>விரிவுரையாளர்:<br>**வி. கிறிஷாந்தி சந்ரசேகர்** |

## தவணை 3 | 1 செப்டெம்பர் – 29 நவம்பர் 2025

# CTS வடகொழும்பு கல்வி நிலைய வகுப்புகள்

## பௌதீகநிலை கல்வி

| ### சிறிய தீர்க்கதரிசிகள் | BTh\|Dip விருப்பு |
|---|---|
| தேவனுடைய ஊழியர்களாகிய தீர்க்கதரிசிகள் தங்களுடைய வெவ்வேறு நிலைமைகளிலும் தேவனின் மீட்பின் சரித்திரத்திலே தேவ நோக்கங்களுக்காக தேவ செய்தியை தொனிக்க செய்தார்கள். இந்த பாடத்தில், இன்று நாம் இந்த செய்திகளை விளங்கி கொள்வது எப்படி என்றும் தேவ சித்தத்தை செய்கின்றவர்களாகி, கிறிஸ்துவின் சபையை கட்டி, தேவ இராஜ்ஜியத்தின் பிள்ளைகளாக உலகிற்கு சாட்சிகளாவதை பற்றியும் கற்றுக்கொள்வோம். | 12 வாரங்கள்<br>நாள்: செவ்வாய்<br>நேரம்: மு.ப.9:00-11:00<br>ஆரம்பம்: செப்டெம்பர் 2<br>திறமை அளவு: 2<br>விரிவுரையாளர்:<br>**சர்மிளா சுதாகர்** |

தவணை 3 | 1 செப்டெம்பர் – 29 நவம்பர் 2025

# CTS வடகொழும்பு கல்வி நிலைய வகுப்புகள்

## பௌதீகநிலை கல்வி

### சுதேசிய கிறிஸ்தவன்

BTh|Dip விருப்பு

சமய அடிப்படைவாதம் மற்றும் கிறிஸ்தவர்களுக்கெதிரான எதிர்ப்புகள் பெருகும் இவ்வேளையில், ஒவ்வொரு கிறிஸ்தவ ஊழியரும் நற்செய்திப்பணி முறைகளை திறனாய்வு செய்ய வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம். அத்திறனாய்வின் முதற்படியாக வேதாகம அடிப்படை கொள்கைகளை சமரசம் செய்யாமல், மேற்கத்திய வாழ்க்கை முறையாக எமது கிறிஸ்தவ வாழ்க்கை முறை இல்லாமல், எமது தேசிய மக்கள் வாழ்விடங்களுக்கு ஏற்ற பண்பாட்டு கலாச்சார விழுமியங்கள் சார்ந்ததாக எவ்வாறு கிறிஸ்தவ சாட்சியுடன் கிறிஸ்துவின் அன்பை பகிர முடியும் என்று இப்பாடம் சிந்திக்க வைக்கிறது.

11 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: மு.ப.9:00-11:15

ஆரம்பம்: செப்டெம்பர் 3

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**கிறிஸ்டி சாமுவேல்**

### வேதாகம அறநெறி

BTh|Dip கட்டாயம்

கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் குணாதிசயத்தை பிரதிபலித்து உலகிற்கு உப்பாகவும், ஒளியாகவும் திகழ அழைக்கப்பட்டவர்கள். இப்பாடமானது அறநெறி சார்ந்த நடைமுறை கேள்விகளை ஆராய்ந்து, வேதாகம அறநெறி கோட்பாடுகளின் அடிப்படையில் வாழ்க்கையின் ஒவ்வொரு தெரிவுகளையும் செயல்களையும் இன்றைய கால நடைமுறை வாழ்க்கையில் பிரயோகித்து கிறிஸ்துவை பிரதிபலிப்பதற்கு வழிகாட்டியாக அமையும்.

12 வாரங்கள்

நாள்: செவ்வாய்

நேரம்: பி.ப.6:00-8:00

ஆரம்பம்: செப்டெம்பர் 2

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**இரா. ஹரிஹரன்**

### அப்போஸ்தலருடைய நடபடிகள்

BTh|Dip விருப்பு

பரிசுத்த ஆவியானவரின் நடபடிகள் என அழைக்கப்படும் இது ஆதி திருச்சபையின் அநேக வருட வரலாற்று சம்பவங்களை உள்ளடக்கிய புதிய ஏற்பாட்டின் பொக்கிஷமான நூலாகும். “கிறிஸ்தவர்கள்” எனும் அடையாளம், திருச்சபை சங்கம், அப்போஸ்தலரின் செயற்பாடுகள், திருத்தூதுப்பணியின் பரம்பல் உள்ளிட்டவற்றின் ஆரம்பங்களை தன்னகத்தே கொண்டுள்ள இப்புத்தகமானது இன்றைய திருச்சபைக்கும் கிறிஸ்தவர்களுக்கும் அவசியமான பல விடயங்களை ஆராய்கிறது.

11 வாரங்கள்

நாள்: புதன்

நேரம்: பி.ப.5:45-8:00

ஆரம்பம்: செப்டெம்பர் 3

திறமை அளவு: 2

விரிவுரையாளர்:
**வனஜா ராஜ்குமார்**

# விரிவுரையாளர் விபரங்கள்



**நிவேதித்தா ஜீவபாலன்,** BA (Psy)
ஆலோசனைப்பணியில் 25 ஆண்டுகளுக்கும் மேலாக சிறந்த அனுபவமுள்ள விசேட மனநல நிபுணர் ஆவார். சிறுவர் மற்றும் வயது வந்தோருக்கு ஆலோசனை வழங்குவதில் சிறந்து விளங்குகிறார். ஆலோசகர்களை பயிற்றுவித்து அவர்களை மேற்பார்வை செய்துள்ளதுடன், இலங்கையில் மனநலம் மற்றும் சிறுவர் பாதுகாப்பு முயற்சிகளுக்கு பெருமளவான பங்களிப்பினை வழங்கியுள்ளார். இவர் வெள்ளவத்தையிலுள்ள கொழும்பு சுவிசேஷ கூடார சபையை தனது ஆராதிக்கும் திருச்சபையாக கொண்டுள்ளார்.



**பெனட் சுரேந்திரன்,** BA (Hons), BSc, MTh
பெனட் சுரேந்திரன் கடந்த மூன்று தசாப்தங்களாக, கொழும்பு, கிருபை சுவிசேஷ திருச்சபையினை தனது ஆராதிக்கும் திருச்சபையாக கொண்டுள்ளதுடன், அதன் மேய்ப்பர் குழுவில் அங்கத்தவராகவும் இருக்கிறார். தனது ஆராதிக்கும் சபை சீர்திருத்தத்தின் ஐந்து தனித்துவ நம்பிக்கைகள் மற்றும் உள்ளூர் திருச்சபையின் முக்கியத்துவத்தையும் விசுவாசிக்கிறவராவார். வேதாகம இறையியல், அரசியல் மற்றும் நடப்பு விவகாரங்களில் அதீத ஆர்வம் உள்ளவர்.



**செல்லதுரை ஜோ. சந்ரசேகர்,** BTh, MSW (candidate)
கொழும்பு இறையியல் கல்லூரியின் கல்விப்பீட உறுப்பினரும், பட்டதாரியுமான இவர், கொரிய சர்வதேச இறையியல் கல்லூரியில் பழைய ஏற்பாட்டிலும், புதிய ஏற்பாட்டிலும் கிறிஸ்தவம் என்ற பாடநெறியில் சான்றிதழை பெற்றவராவார். வத்தளை, சீயோன்மலை கூடார திருச்சபையினை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளதுடன், அதன் தலைமை போதகருமாவார். அத்துடன் தேசிய கிறிஸ்தவ ஊழியர்களின் ஐக்கியத்தின் பொதுச்செயலாளராகவும் கடமையாற்றுகிறார்.



**சர்மிளா சுதாகர்,** BTh, MA (candidate)
கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர், கணக்காளராக பணியாற்றுகிறார். கடந்த இரு தசாப்தங்களாக யுத்தம் மற்றும் பேரழிவுகளால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்காக கிறிஸ்தவ சர்வதேச உதவி அமைப்புகளுடன் ஒன்றிணைந்து பங்காற்றியுள்ளார். இவர் வத்தளை ஜெய ஜீவிய திருச்சபையை தனது ஆராதிக்கும் திருச்சபையாக கொண்டுள்ளார்.



**மகேஸ்வரன் மாணிக்கராஜா,** BTh
கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர் கொழும்பு, மக்கள் தேவ சபையினை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளதுடன், அதன் போதகராகவும் பணியாற்றி வருகின்றார்.

# விரிவுரையாளர் விபரங்கள்



**கே. யாபேஸ்,** BTh
கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர் AOG திருச்சபையினை தனது ஆராதிக்கும் சபையாகவும், அதன் போதகராகவும் பணியாற்றுவதுடன், திருச்சபைகளில் கற்பித்தல், பிரசங்கித்தல் தலைமைத்துவ பயிற்சியளித்தல், வேதாகம கல்லூரியில் கற்பித்தல் போன்ற பணிகளிலும் ஈடுபட்டு வருகிறார்.



**ஜூலியன் தேவதாசன்,** BTh, MDiv, MTh (candidate)
**கொழும்பு இறையியல் கல்லூரியின் உதவி கல்விப்பீடாதிபதியான,** இவர், தெற்காசிய இறையியல் கல்லூரியில் (SAIT, இலங்கை), இறையியல் கற்கைகள் மற்றும் திருத்தூதுப்பணிக்கான ஆசிய மையம் (ACTS, தென் கொரியா) ஆகியவற்றின் பட்டதாரியுமாவார். தற்போது தென்னாபிரிக்க இறையியல் கல்லூரியில் (தென்னாபிரிக்கா) தனது MTh. இவர், கிறிஸ்துவின் ஸ்தானாதிபதிகள் (AMBASSADORS FOR CHRIST INTERNATIONAL) என்ற சர்வதேச அமைப்பின் ஊழிய உறுப்பினராகவும், கருக்கலைப்பிலிருந்து மீண்டு உயிர்வாழ்பவர்களின் வலையமைப்பின் (Abortion Survivors Network) சர்வதேச கருக்காப்பிற்கான (Pro-Life) பேச்சாளராகவும் திகழ்கின்றார். சிலாபம், புனித யாக்கோபின் (St. James) திருச்சபையை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளார்.



**கிறிஸ்துமணி செல்லையா,** DipEng (Mech), BTh, MA, MDiv
கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியான இவர் Campus Crusade நிறுவனத்தின் பல்கலைக்கழக ஊழியத்தின் நிதி முகாமையாளராகவும், சபை ஸ்தாபித்தல் இயக்கத்தின் இணைப்பாளராகவும் கடமையாற்றியுள்ளார். நீண்ட காலமாக முழுநேரப்பணியில் ஈடுபட்டு வரும் இவர் தற்பொழுது இரட்சணியசேனை சபையின் கல்வி இணைப்பாளராகவும், சபைகளில் சீஷத்துவ பயிற்சியளித்தல், கற்பித்தல், பிரசங்கித்தல், வேதாகம கல்லூரிகளில் கற்பித்தல் போன்ற பணிகளில் ஈடுபட்டு வருகிறார். கொழும்பு, கொம்பனித்தெரு, இரட்சணியசேனை திருச்சபையை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளார்.



**கிறிஸ்ரி பாலேந்திரன்,** Certificate in Counselling CWR-UK, BD, MA (candidate)
இவர் சேராம்பூர் பல்கலைக்கழகத்தின் பட்டதாரியும், சர்வதேச வேதாகம கழகத்தின் இலங்கைக்கான இயக்குனருமாவார். கற்பித்தல் பணியில் நீண்ட கால அனுபவமுடையவரும், பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியருமாவார். இவர் மூர் வீதியிலுள்ள மெதடிஸ்த திருச்சபையை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளார்.

# விரிவுரையாளர் விபரங்கள்



**நிரஞ்ஜனி இராஜரட்ணம்,** HND (Counselling), BTh, MSc (candidate)
கொழும்பு இறையியல் கல்லூரியின் இளமாணி பட்டதாரியும், பகுதி நேர கல்விப்பீட உறுப்பினருமான இவர் தற்போது மருத்துவ உளவியல் முதுமாணி பட்டப்படிப்பினை கற்றுக்கொண்டிருக்கிறார். World Vision Sri Lanka நிறுவனத்தில் 15 ஆண்டுகளுக்கு மேலாகவும், The Salvation Army Sri Lanka தலைமையகத்தில், சிறுவர் நிகழ்ச்சி திட்டங்கள் தொடர்பான அறிவுரை ஆலோசகராகவும் மற்றும் Wesley College-ல் மாணவ ஆலோசகராகவும் பணியாற்றியுள்ளார். Child Rights Activistஆக இருப்பதுடன், திருச்சபைகள் மற்றும் கிறிஸ்தவ நிறுவனங்களுடன் இணைந்து ஆலோசகராக பணிபுரிந்து வருகின்றார்.



**இரா. ஹரிஹரன்,** BTh, MMin
**கொழும்பு இறையியல் கல்லூரியின் விரிவாக்கல் நிலையங்களின் முகாமையாளரான இவர்,** சிங்கப்பூர் திரித்துவ இறையியல் கல்லூரியில் இளமாணி, முதுமாணி பட்டங்களை பெற்றுள்ளதுடன், மிக நீண்ட காலமாக இளைஞர் பணிகளில் ஈடுபட்டு வருகிறார். வெள்ளவத்தை மூர் வீதியில் அமைந்துள்ள மெதடிஸ்த திருச்சபையை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளார்.




**வனஜா ராஜ்குமார்,** BTh
கொழும்பு இறையியல் கல்லூரியின் உதவி நூலகவியலாளராகவும், வடகொழும்பு நிலையத்தின் ஒருங்கிணைப்பாளராகவும் பணியாற்றி வரும் இவர் கல்லூரியின் கல்விப்பீட உறுப்பினருமாவார். பெண்கள் மற்றும் சிறுவர் ஊழியங்களில் ஈடுபட்டு வருவதுடன், இலங்கை வேதாகம சங்கத்தின் 'Master Facilitator in Healing the Wounds of Trauma Children' பயிற்சியை பெற்றவரும், "தாயின் வடிவமைப்பு" என்பதின் சிரேஷ்ட வளவாளருமாவார். சத்திய வசனம் நிறுவனத்தின் தமிழ்ப்பிரிவு நிர்வாக ஒருங்கிணைப்பாளராக நான்கு ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். இவர், கொழும்பு-13, ஜிந்துப்பிட்டி, புனித தோமாவின் ஆலயத்தினை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளார்.




**யொஹான் கிருஷ்ணகுமார்,** BTh, MTh
நோர்ட்டன் பிரிட்ஜ் SAIT கலாசாலையில் இளமாணி பட்டத்தையும் வேல்ஸ்ஸின் Bangor பல்கலைக்கழகத்தில் நடைமுறை இறையியலில் முதுமாணி பட்டத்தையும் Global Institute of Theology (WCRC)-ல் சீர்திருத்த இறையியல் பட்டத்தையும் பெற்ற இவர் கண்டி City Mission நிறுவனத்தின் நிகழ்ச்சி ஒருங்கமைப்பாளராகவும், உள்ளூர் மற்றும் வெளியூர் வேதாகம கலாசாலைகளில் விரிவுரையாளராகவும், தனது உள்ளூர் திருச்சபையில் இளைஞர் ஊழிய பணியாளராகவும் மூப்பராகவும் சேவையாற்றுகின்றார். கண்டி, பிரஸ்படேரியன் திருச்சபையை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளார்.

# விரிவுரையாளர் விபரங்கள்



**காமினி ஜயந்த,** BTh, MSW (candidate)
கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியும், Ragama, Thuduwegedera இலுள்ள Prayer Tower Church இல் துணை போதகராகவும், தனது ஆராதிக்கும் சபையாகவும் கொண்டுள்ளதுடன், தற்போது Infinity Centre for Higher Studies(இலங்கை)-ன் முழு இலங்கைக்குமான நிர்வாக ஒருங்கிணைப்பாளராக கடமையாற்றுகிறார். அத்துடன் இலங்கையில் பல பாகங்களுக்கும் சென்று வேதாகம பாடங்களையும், பிரசங்கங்களையும் மேற்கொள்வதுடன், போதைப்பொருட்களுக்கு அடிமையாயுள்ளவர்களை புனரமைக்கும் பணியிலும் ஈடுபட்டுள்ளார்.



**எஸ். கதிரேசப்பிள்ளை,** BD, MTh
இவர் கல்குடா சுவிசேஷ பயிற்சி நிலையத்தின் அதிபராகவும் மெதடிஸ்த சபையின் வடகிழக்கு பிரதேச தலைவராகவும், திருப்பேரவை காரியதரிசியாகவும் கடமையாற்றியுள்ளார். நீண்டகாலமாக மெதடிஸ்த திருச்சபையினை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளதுடன், அதன் போதகராகவும் பணியாற்றி வருகின்றார்.



**ஞா. ஸ்டன்லி நெல்சன்,** BTh, MMin
கொழும்பு இறையியல் கல்லூரியிலும் அதன் யாழ்ப்பாண கல்வி நிலையத்திலும் முன்னாள் பகுதி நேர விரிவுரையாளராக சேவையாற்றியுள்ள இவர் சிங்கப்பூர் திரித்துவ இறையியல் கல்லூரியின் இளமாணி மற்றும் முதுமாணி பட்டதாரியாவார். இலங்கை தேசிய கிறிஸ்தவ சுவிசேஷ கூட்டணியின் முன்னாள் தலைவராகவும், இலங்கை கிறிஸ்தவ சீர்திருத்த திருச்சபையின் முன்னாள் தலைவராக பணியாற்றியுள்ளதுடன், தற்போது அத்திருச்சபையின் செயலாளராகவும், அதன் இறையியல் கல்வியகத்தின் அதிபராகவும், தெஹிவலை சபையின் போதகராகவும் பணியாற்றுவது குறிப்பிடத்தக்கது. அத்துடன் இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றத்தின் திருச்சபை ஒருமைப்பாட்டுக்கான ஆணைக்குழுவின் தற்போதைய தலைவருமாவார்.



**வி. கிறிஷாந்தி சந்ரசேகர்,** Dip (Counselling), BTh
கொழும்பு இறையியல் கல்லூரியின் பட்டதாரியும், சமூக அபிவிருத்தி தேசிய நிறுவனத்தின் (National Institute of Social Development) ஆற்றுப்பணியில் பட்டச்சான்றிதழை பெற்றவருமான இவர், குடும்பங்கள் மத்தியிலே ஆற்றுப்பணியிலே ஈடுபட்டு வருகிறார். தெமட்டகொட, கிரேஸ் வேதாகம நிறுவனத்தின் வேதாகம கல்வி ஆசிரியராக பணியாற்றியுள்ளார். வத்தளை, சீயோன்மலை கூடார திருச்சபையை தனது ஆராதிக்கும் சபையாக கொண்டுள்ளதுடன், அதன் நிர்வாக சபையின் காரியதரிசியாகவும், ஞாயிறு பாடசாலை கண்காணிப்பாளராகவும் சேவையாற்றி வருகிறார்.

# விரிவுரையாளர் விபரங்கள்



**கிறிஸ்டி சாமுவேல்,** EPCM, BE, MA

Mission to Asia (இந்தியா), Infinity Centre for Higher Studies (இலங்கை) ஆகியவற்றின் ஸ்தாபக இயக்குனராவார். இந்தியாவின், எம்.கே பல்கலைக்கழகம் (கணணி விஞ்ஞான தொழிநுட்பவியல் [BE]), புனித. பவுல் இறையியல் கல்லூரி (பிரயோக இறையியலில் முதுமாணி), மார்ட்டின் லூத்தர் பல்கலைக்கழகம் (கிறிஸ்தவ முகாமைத்துவ கற்கைநெறி) போன்றவற்றில் பட்டம் பெற்றவராவார். தெற்காசியாவின் பல்தரப்பட்ட திருத்தூதுப்பணி செயற்பாடு அமைப்புகளின் உறுப்பினரும், இலங்கையில் தகவல் தொழில்நுட்ப கைத்தொழில் அமைப்பு நிர்வாகக்குழுவின் அங்கத்தவருமாவார் (கல்விப்பிரிவு). வெள்ளவத்தை, மூர் வீதியில் அமைந்துள்ள மெதடிஸ்த திருச்சபையை தனது ஆராதிக்கும் சபையாக கொணடுள்ளார்.

# CTS பாடத்திட்டங்கள்

நீங்கள் உங்களது தனிப்பட்ட விருப்பத்தின்படி பாடநெறிகளை தெரிவு செய்தாலும்கூட, ஆகக்கூடிய பயனை பெற்றுத்தரக்கூடிய வகையில் கொழும்பு இறையியல் கல்லூரி வழங்கும் ஒரு பாடத்திட்டத்திற்கு உங்களை பதிவு செய்து கொள்ளுவதை குறித்து சிந்திக்கும்படி நாம் உங்களை உற்சாகப்படுத்துகிறோம்.

கொழும்பு இறையியல் கல்லூரி நான்கு மட்டங்களில் பாடத்திட்டங்களை வழங்குகின்றது. இவையனைத்தும் ஆசிய இறையியல் சங்கத்தினால் (Asia Theological Association) அங்கீகரிக்கப்பட்டவையாகும். உங்களுக்கு அதிகளவு பயனை தரக்கூடிய பாடநெறி எதுவென்பதை கண்டறியுங்கள்:

**கிறிஸ்தவ கல்விச்சான்றிதழ் (CCS)**
இது வாழ்க்கை பயணம், தொழில் மற்றும் ஊழியம் ஆகியவற்றிற்கு 21-ம் நூற்றாண்டிலுள்ள கிறிஸ்தவர்களை ஆயத்தப்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.
கற்கை மொழி: தமிழ், சிங்களம், ஆங்கிலம்
*தேவைப்படும் மொத்த திறமை அளவு (புள்ளிகள்): 36*

**கிறிஸ்தவ கல்விச்சான்றிதழ்: சிறுவர் ஊழிய களம் (CCS-CM)**
திருச்சபைக்கும் சமூகத்திற்குமான செயற்திறன் மிக்க சேவையாளர்களை பயிற்றுவிப்பதற்காகவே இது வடிவமைக்கப்பட்டுள்ளது.
கற்கை மொழி: தமிழ், சிங்களம்
*தேவைப்படும் மொத்த திறமை அளவு (புள்ளிகள்): 36*
*இயங்கலை மூலமாக கற்பித்தல் இடம்பெறும்*

**இறையியல் பட்டச்சான்றிதழ் (DipTh)**
இது கிறிஸ்தவ ஊழியர்கள் ஊழியத்திற்கு தேவையான ஆழமான வேதாகம அறிவு மற்றும் செயற்திறன்களை, பெற்றுக்கொண்டு தங்களை ஆயத்தப்படுத்தும்படி வடிவமைக்கப்பட்டுள்ளது.
கற்கை மொழி: தமிழ், சிங்களம், ஆங்கிலம்
*தேவைப்படும் மொத்த திறமை அளவு (புள்ளிகள்): 72*

**இறையியல் இளமாணிப்பட்டம் (BTh)**
இது கிறிஸ்தவர்களை சபையின் தலைமைத்துவத்திற்கு (மேய்ப்பத்துவம், கற்பித்தல் அல்லது அது போன்ற ஏனைய ஊழியங்கள்) பயிற்றுவிப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.
கற்கை மொழி: தமிழ், சிங்களம், ஆங்கிலம்
*தேவைப்படும் மொத்த திறமை அளவு (புள்ளிகள்): 108*

**மேலதிக தகவல்கள் மற்றும் உதவிக்கு தொடர்பு கொள்க:**
கல்விசார் காரியாலயம்
011-2890809; registrar@cts.lk; www.cts.lk

**வடகொழும்பு கல்வி நிலையம்:**
0771415670; nc@cts.lk

# கிறிஸ்தவ கல்விச்சான்றிதழ்
# சிறுவர் ஊழிய களம்

**பாடநெறிகள்:**

- வாரத்திற்கு இரண்டு தடவை 3 மணிநேர அமர்வுகள் நடைபெறும்.
  - ஒவ்வொரு திங்கட்கிழமையும் நண்பகல் 1.00 முதல் மாலை 4.00 வரை
  - ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் காலை 9.30 முதல் நண்பகல் 12.30 வரை
- ஒவ்வொரு திறமை அளவு / புள்ளிகளானது 2 மணித்தியாலங்களை உள்ளடக்கியுள்ளது.
- மாணவர்களால் இரண்டு ஆண்டுகளில் பூர்த்தி செய்யக்கூடிய வகையில் இந்த பாடநெறி வடிவமைக்கப்பட்டுள்ளது.

| | பாடங்கள் | திறமை அளவு (புள்ளிகள்) |
|---|---|---|
| கட்டாய பாடங்கள் | | |
| வேதாகமம் மற்றும் இறையியல் பாடங்கள் | 04 | 08 |
| சிறுவர் ஊழிய பாடங்கள் | 04 | 08 |
| விருப்புப்பாடங்கள் | 10 | 20 |
| கருத்தரங்குகள் | 04 | 00 |
| மொத்தம் | 22 | 36 |

கவனிக்கப்பட வேண்டியது: சான்றிதழை பெற்றுக்கொள்வதற்கு மேலே உள்ள அனைத்தும் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

**பாடங்கள் கற்றுக்கொடுக்கப்படும் முறைகள்:**

**இயங்கலை:** Zoom வழியாக பாடங்கள் நடைபெறும். இங்கு பாடக்குறிப்புக்களை Moodle வழியாக பெற்றுக்கொள்ளலாம். இதற்கு செயற்திறனுடைய இணையத்தள வசதியும் டிஜிட்டல் சாதனமொன்றும் அவசியம்.

**மேலதிக தகவல்களுக்கான தொடர்பு:**

திருமதி. கிறிஷ்ணி எதிரிசிங்க
ஒருங்கிணைப்பாளர் : சிறுவர் ஊழிய களம்
+94 764823127
cm@cts.lk

# கிறிஸ்தவ கல்விச்சான்றிதழ்
# சிறுவர் ஊழிய களம்

**கட்டாயம்: வேதாகமம் மற்றும் இறையியல் பாடங்கள்**

சிறுவர்கள் குறித்த வேதாகம கண்ணோட்டம்
இறையியலுக்கான அறிமுகம்
புதிய ஏற்பாட்டிற்கான அறிமுகம்
கிறிஸ்தவ உலகநோக்கை மேம்படுத்தல்

**கட்டாயம்: சிறுவர் ஊழிய பாடங்கள்**

பரிபூரணமான சிறுவர் அபிவிருத்தி
சிறுவர்களுக்கு வேதாகமத்தை கற்பித்தல்
சிறுவர், திருச்சபை மற்றும் திருத்தூதுப்பணி
சிறுவர் பணியில் அறநெறிகள்

**விருப்புப்பாடங்கள்**

துஷ்பிரயோகத்திற்குள்ளான சிறுவர்களுக்கான பணி
வாலிபர் ஊழியம்
பராமரிப்பாளரின் ஆவிக்குரிய உருவாக்கம் மற்றும் மன அழுத்தத்திற்கான முகாமைத்துவம்
கிறிஸ்தவ கண்ணோட்டத்தில் தொடர்பாடல்
கிறிஸ்தவ பிள்ளை வளர்ப்பு
சிறுவர்களுக்கான சீஷத்துவம்
உங்களுக்குள் இருக்கும் தலைமைத்துவத்தை வளர்த்தெடுத்தல்
ஆபத்திலிருக்கும் சிறுவர்கள் மீதான திருச்சபையின் பங்கு
கலாச்சாரத்தினை புரிந்து கொள்ளல்
சிறுவர் ஆற்றுப்பணி

தயவு செய்து அவதானிக்கவும்: குறிப்பிடப்பட்டுள்ள பாடநெறிகள் தவிர்க்க முடியாத காரணங்களினிமித்தம் மாற்றமடையலாம்.
பதிவு செய்வதற்கு முன்னர் சிறுவர் ஊழிய களத்தின் ஒருங்கிணைப்பாளரை தொடர்பு கொள்ளவும்.

1வது தளத்திலுள்ள எமது

CTS

புத்தக நிலையத்திற்கு

விஜயம் செய்யுங்கள்

CTS வெளியீடு





CTS நூலகம்

41,000+ புத்தகங்களினுடைய

நூலக சேகரிப்புகளின் முகப்பு

ஆங்கிலம் | சிங்களம் | தமிழ்

இன்றே CTS நூலகத்தில் அங்கத்தவராக இணைந்துகொள்ளுங்கள்!

மேலதிக விபரங்களுக்கு:

+ 94 112 890809 | library@cts.lk

CTS நூலகம் அனைத்து திருச்சபைகளுக்கும் திறந்துள்ளது

189 துடுகமுனு வீதி, கொஹுவலை
(+94) 11 2890809 | registrar@cts.lk | www.cts.lk